பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 33 ஞாயிற்றுக்கிழமை 18.09.2022 கதிர் 204


## வவுனியாவில் ரயில் மோதி குடும்பஸ்தர் பரிதாபச் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியா - ஓமந்தையில் ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் நேற்றிரவு 10 மணியளவில் ஓமந்தை, விளக்குவைத்தகுளம் பகுதியில் பயணித்தபோது ரயில் பாதையில் ☞2

# தமிழரின் நிலத்தொடர் துண்டிப்பதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது!



### திருக்கோணேஸ்வரம் ஆக்கிரமிப்பும் நல்லதுக்கல்ல என்று ஜனாதிபதிக்குச் சம்பந்தன் காட்டமான கடிதம்

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இங்குள்ள மாவட்டங்களைக் கூறு போட்டு இன நிலத் தொடர்ச்சியைத் துண்டிக்கும் நடவடிக்கையை இந்தியா ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டாது. ☞2

## ரஷ்யாவிடம் இலங்கை மன்னிப்புக் கோரியது!



ரஷ்ய ஏரோஃப்ளோட் விமானம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டமை ஒரு பாரிய தவறு என்றும், இது மீண்டும் நடக்காது என அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர் என்றும் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ☞2

## ஹட்டனில் வெடித்தது பெண்கள் போராட்டம்



'பொருட்களின் விலையை உடனடியாகக் குறை' என்ற தொனிப்பொருளில் ஹட்டனில் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக இன்று பிற்பகல் இந்தப் போராட்டம் நடைபெற்றது. இதில் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், தோட்டத் தொழிலாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், ☞2

## அமைச்சுப் பதவிகளைப் பெற்ற சு.கவினரின் உறுப்புரிமை 'அவுட்'

### மைத்திரி தலைமையிலான குழு அதிரடி



தற்போதைய அரசில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களைப் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளின் கட்சி உறுப் புரிமையை இரத்துச் செய்வதற்குக் கட்சியின் தலைமை தயாராகுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கட்சியின் மத்திய செயற்குழுவின் ☞2

## குடாநாட்டில் 20 கிராமங்களில் ஹெரோய்னுக்குப் பலர் அடிமை



### வெளிவந்தது அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 20 கிராமங்களைச் சேர்ந்த பலரும் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் பாவனைக்கு முற்றாக அடிமையாகியுள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளி வந்துள்ளது. அதேவேளை, இந்த மாவட்டத்தில் ஹெரோய்ன் ☞3

## 16 வயது மாணவன் ஒரு வாரமாக மாயம்

கொட்டாவ பகுதியில் 16 வயதான பாடசாலை மாணவன் ஒருவர் கடந்த 7 நாட்களாகக் காணாமல்போயுள்ளார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுவர் கடந்த 9ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் தமது இரண்டு சிறுவர்களுடன் மஹல்வராவ ☞2

## அஸர்பைஜானில் இலங்கையர்கள் நால்வர் சிக்கினர்

அஸர்பைஜானில் நான்கு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்குள்ள ஹொராடிஸ் எல்லைப் பகுதியில் அஸர்பைஜான் அதிகாரிகளால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். தோஹா மற்றும் டுபாயில் இருந்து சென்று ☞2

## கோப்பாயில் மூன்று ஆண்களால் 16 வயது சிறுவன் துஷ்பிரயோகம்

யாழ்., கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னுக்கு அடிமையான 25 க்கும் 27 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் மூவரால், அந்தப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவன் ஒருவன் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஒன்றில் வைத்தே இந்தச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தற்போது தெரிவித்துள்ளனர்.

மாலை வேளையில் ☞2

## 'மொட்டு' உறுப்பினரின் மகன் மதுபோதையில் வெறியாட்டம்

### பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகாயம்



கெஸ்பேவ மாநகர சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் ஒருவரின் மகன், பாதுகாப்புக் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் பொலிஸார் சந்தேகநபரைத் தேடி வருகின்றனர். ☞2

## யாழ்ப்பாணத்தில் ஹெரோய்னுக்கு அடிமையான 14 வயதுச் சிறுவனால் 7 வயதுச் சிறுமி வல்லுறவு

யாழ். கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுயொன்றில், உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னுக்கு அடிமையான 14 வயதுச் சிறுவன் அதே பகுதியைச் சேர்ந்த 7 வயது சிறுமியை வன்புணர்ந்துள்ளார்.

அந்தப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஒன்றில் வைத்தே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 14 வயதுச் சிறுவன் கைது செய்யப்பட்டு நன்னடத்தைபாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேவேளை, பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்தத் தகவல் தற்போதே ஊடகங்களுக்குத் தெரியவந்துள்ளது.

## அமைச்சுப்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்துக்கு எதிராக அமைச்சுப் பதவிகளை பெற்றவர்களின் உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு கட்சியின் தலைவருக்கு அதிகாரமளித்து அண்மையில் அதன் யாப்பு திருத்தப்பட்டது.

இதற்கமைய கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் தொடர்பில் அரசியல் குழுவுக்கு எதிர்வரும் நாட்களில் அனுமதிக்கப்படவுள்ளது என்று கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் தற்போதைய அரசில் அமைச்சுப் பதவிகளை பெற்றுள்ளனர்.

அத்துடன் கட்சியின் பொருளாளர் லசந்த அழகியவண்ண அண்மையில் இராஜாங்க அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டார்.

அவருக்கு மேலதிகமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப செயலாளர் ஜகத் புஸ்பகுமார மற்றும் சாமர சம்பத் தஸநாயக்க ஆகியோருக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 16 வயது..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலுள்ள தொலைபேசி வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்றுள்ளார்.

பின்னர் மீண்டும் கொட்டாவ நகருக்கு திரும்பி, பஸ்ஸில் மாகும்புர பகுதிக்கு செல்லும் சி.சி.ரி.வி. காணொளி காட்சிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பின்னர் அவர் பஸ்ஸில் கொட்டாவ பக்கம் மீள திரும்பியுள்ளார். எனினும், அதன் பின்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில், குறித்த சிறுவரை தேடி விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கொட்டாவ பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## வவுனியாவில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த குடும்பஸ்தரை மோதித் தள்ளியது.

இதன்போது சம்பவ இடத்திலேயே குடும்பஸ்தர் மரணமடைந்தார்.

ஓமந்தை, விளக்குவைத்த குளம் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எஸ்.நகுலன் என்பவரே உயிரிழந்தார்.

சடலம் ரயில் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு, வவுனியா ரயில் நிலையத்தில் வைத்துப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸாரால் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அஸர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு சட்டவிரோதமாகத் தங்கியிருந்த நிலையில் அவர்கள் கைதானார்கள் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் அங்கிருந்து துருக்கிக்கும் பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்லும் திட்டத்தில் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ரஷ்யாவிடம்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்துல குணவர்தன தெரிவித்தார். ரஷ்ய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.

கடந்த ஜூன் 2ஆம் திகதி அன்று இலங்கையில் ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமானம் தடுத்துவைக்கப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்து குணவர்தன, அது ஒரு பாரிய தவறு, அதற்காக நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றோம் என்று கூறினார்.

இந்தச் சம்பவம் முற்றாகத் தீர்க்கப்பட்டது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் இலங்கையில் மீண்டும் ஒருபோதும் நடக்காது என்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசு ஆகிய தரப்புகள் உத்தரவாதம் அளிக்கின்றன.

இலங்கையில் எந்த விமானத்தையும் தடுத்து வைக்க நாங்கள் விரும்பவில்லை - என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

## தமிழரின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருக்கோணேஸ்வரம் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

### திருக்கோணேஸ்வரம்

திருக்கோணேஸ்வரத்துக்குள் நுழைவதற்கான பிரெட்ரிக் கோட்டையின் ஒரு பகுதியில் தங்கியிருந்த இராணுவத்தினர் அங்கு புத்தர் சிலையொன்றை நிர்மாணித்தனர்.

திருக்கோணேஸ்வரத்தையும் புத்த பெருமானையும் வழிபட விரும்பிய மக்கள் இப் பிரதான நுழைவாயிலின் வழியாக கோட்டையினுள் சென்று வழிபாடு செய்தனர். கோட்டைக்குள் நுழைந்து புத்தபெருமானையும் கோணேஸ்வரரையும் வழிபடுவதற்கு வேறு வழிகள் ஏதும் இருக்கவில்லை.

அண்மைக்காலங்களில் புத்தபெருமானின் சிலைக்கும் அங்கிருந்து திருக்கோணேஸ்வரத்துக்கும் ஒரு புதிய பாதை திறக்கப்பட வேண்டுமென்று முன்மொழிவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தேவையற்றது என்பதோடு, ஆள்கள் இவ் வழியில் அத்துமீறுவதற்கும் அக் காணியில் தங்கியிருப்பதற்கும் வழிவகுக்கும்.

அது திருக்கோணேஸ்வரம் கோயில் மற்றும் புத்த பெருமானின் சிலை ஆகியவற்றின் புனிதத்தன்மையும் பக்தி உணர்வும் குறைவடைவதற்கே வழிவகுக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரினால் இரத்தினபுரியிலிருந்து சில வர்த்தகர்கள் கொண்டுவரப்பட்டு, கோணேஸ்வரத்துக்கான பாதையில் அமர்த்தப்பட்டனர். அது இப்பகுதியின் புனிதத்தன்மையும் பக்தி உணர்வும் குறைவடைவதற்குக் காரணமாகியது.

புத்தபெருமான் சிலை உள்ள பகுதியில் திருக்கோணேஸ்வரம் வரையிலான இப் புதிய பாதை திறப்பு நிறுத்தப்பட வேண்டுமென நான் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். இல்லையேல் இது தீங்கு இழைக்கப்படுவதற்கே வழிவகுக்கும்.

### நிலத் துண்டிப்பு

ஒரு சர்வதேச உடன்படிக்கையான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பெரும் நிலப்பரப்பு, திருகோணமலை மாவட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுர மாவட்டத்திலிருந்து ஒரு பெரும் நிலப்பரப்பு பதிலீடு செய்யப்படவுள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதன்மையான நோக்கம் வடக்குமற்றும்கிழக்குமாகாணங்களின் இனத்துவ நிலத் தொடர்ச்சியைத் துண்டிப்பதாகும்.

பொலனறுவை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை கிழக்கு மாகாணத்துக்குள் கொண்டுவரும் அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை பொலனறுவை மாவட்டத்தோடு இணைக்கும் அதே போன்றதொரு முன்மொழிவு திருகோணமலையின் தெற்குப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது, பாரதூரமான எதிர்வலைகளையும் உலகில் இரண்டாவது மிகச் சிறந்த துறைமுகமாக கருதப்படும் திருகோணமலைத் துறைமுகத்துக்குப் பாரதூரமான பின்விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தோடு, வடக்கு மற்றும் தெற்கின் கடல்சார் எல்லைகள் ஊறுபடுவதற்கும் வழிவகுக்கும்.

இப் பகுதிகளில் வாழுகின்ற தமிழ்ப் பேசும் மக்களோ அல்லது எமது அயல்நாடோ அல்லது மிக அருகில் உள்ள நாடுகளோ இந்த நடவடிக்கையை அங்கீகரிக்கப்போவதில்லை.

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கிலும் தெற்கிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையில் இனத்துவ நிலத் தொடர்ச்சியை இல்லாது செய்வதே இதன் முழு நோக்கமாகும்.

கிழக்கு மாகாணத்தை ஒரு சிங்கள பெரும்பான்மை மாகாணமாக மாற்றியமைப்பதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத் தொடர்ச்சியை துண்டிப்பதும் பேரினவாத சிங்கள அரசுகளின் நீண்டகால குறிக்கோளாக இருந்து வருகின்றது.

இம் முயற்சிகள் அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் தமிழ்பேசும் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்டதாகும் என்பதோடு, எந்தவொரு மாவட்டமும் சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக இல்லை என்பதுவுமே யதார்த்தம்.

இது, வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்ட தமிழர்கள் தமிழ்பேசும் மக்கள் ஓர் ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கை என்ற வரையறைக்குள் உள்ள சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு மக்கள் குழுவினர் ஆவர் என்ற நிலைப்பாட்டுக்கு அமைவானதாகும். இதனையே தமிழர்கள் - தமிழ்பேசும் மக்கள் ஓர் அரசியல் தீர்வாகக் கோரி நிற்கின்றனர்.

இந்த நிலைப்பாடு 1956ஆம் ஆண்டிலிருந்து அனைத்து ஐனநாயகத் தீர்ப்புகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரச்சினையை நீடிக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைவிட, இந்த அடிப்படையில் இப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டுமென நான் பலமாக வலியுறுத்துகின்றேன் - என்றுள்ளது.

போன்ற பதாதைகளை ஏந்திய வண்ணம், கோங்களை எழுப்பியவாறு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## கோப்பாயில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவனை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று மூவரும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் தாயார் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முறைப்பாட்டை மீளப்பெறுமாறு சிறுவனின் தாயாருக்கு, அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அழுத்தம் - மிரட்டல் விடுக்கின்றார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## 'மொட்டு'..........

தாக்குதலில் படுகாயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு குடிபோதையில் வந்த குறித்த மாநகர சபை உறுப்பினரின் மகன் அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரியைத் தாக்கினார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ஹட்டனில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகச் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்றனர்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசணம் எங்கே?, பால், முட்டை, இறைச்சி, மீன் ஆகியன அமைச்சர்களுக்கு மாத்திரமே, மக்கள் வீதியில்; சொகுசு வாகனம் அமைச்சர்களுக்கு, நாட்டுக்குப் பாரமான அமைச்சர்களின் வரப்பிரசாதங்களை இல்லாதொழி









## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

### அடுத்த மாத நெருக்கடிகள்

மேலும் புதிய அமைச்சர்களை நியமிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தேசத் திட்டம் பெரும்பாலும் அடுத்த மாதம் முற்பகுதியில் இடம்பெறும் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது. இந்தப் பின்புலத்தில் இலங்கைக்கு அடுத்த வார முற்பகுதி மிகவும் முக்கிய காலகட்டமாக அமையப்போகிறது.

இப்போது லண்டனில் பிரிட்டனின் மகாராணி இரண்டாவது எலிசபெத்தின் இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றச் சென்றிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை அந்த நிகழ்வை முடித்துக் கொண்டு நாடு திரும்புகிறார். வந்த கையுடன் மூன்று, நான்கு நாள்களில் – பெரும்பாலும் 25 அல்லது 26 ஆம் திகதி – அவர் ஜப்பான் பயணமாகின்றார்.

அவரின் இப்போதைய இரண்டு பயணங்களுமே தலைவர்களின் இறப்பு நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையனவே. பிரிட்டிஷ் மகாராணியின் இறுதி நிகழ்வில் பங்குபற்றச் செல்லும் ஜனாதிபதி அங்கிருந்து திரும்பிய கையோடு, ஜப்பானின் முன்னாள் பிரதமர் அபேயின் இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றுவார்.

அதற்காக 25ஆம் திகதி ஜப்பான் புறப்படும் அவர் 27ஆம் திகதி ஜப்பானின் முன்னாள் பிரதமரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர், ஜப்பான் தலைவர்களுடன் பேச்சு நடத்துகின்றார். அதம் பின்னர் அங்கிருந்து மணிலா நகருக்கு செல்கின்றார். அங்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளுடனான பேச்சுக்களில் கலந்து கொண்ட பின்னர் இம்மாத இறுதியில் நாடு திரும்புவார்.

அதற்குப் பின்னரே உத்தேச அமைச்சர்கள், புதிய மாகாண ஆளுநர்கள் நியமனம் எல்லாம் நடக்கும் என்று கூறப்படுகின்றது. ஜப்பானில் அந்த நாட்டு பிரதமருடனும் மணிலாவில் ஆசிய அபிவிருத்தி வாங்கிப் பிரமுகர்களுடன் நடத்தும் பேச்சுகளை அடுத்து புதிய உதவி திட்டங்கள் மற்றும் தாராள கடன் உதவிகளைப் பெற முடியும் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்கா நம்புகின்றார்

அவற்றை உறுதி செய்து, அவை பற்றிய அறிவிப்பை வெளிப்படுத்தும்போது தமது அரசு குறித்து ஒரு நம்பிக்கை நாட்டில் உறுதியாகும் என ஜனாதிபதி எண்ணுகிறார். இப்போது ஐக்கிய மக்கள் சக்தி முதலிய எதிரணிக் கட்சிகளில் இருந்தபடி, ரணில் வீசும் அமைச்சர் பதவி எனும் எலும்பு துண்டை கவ்விக் கொள்ள அவர் பக்கம் தாவுவதா என்ற இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் பல அரசியல் தலைவர்களுக்கு, தமது ஜப்பான் விஜய முடிவுகளில் அறிவிக்கப்படக் கூடிய நம்பிக்கை தரும் திட்டங்கள் மன மாற்றத்தை ஏற்படுத்தும் என அவர் கருதுகின்றார்.

அதனால் ஜப்பான் விஜய முடிவில் – அடுத்த மாதம் முற்பகுதியில் – தமது அமைச்சரவையின் இறுதி விஸ்தரிப்பில் அவர் இறங்குவார் எனக் கூறப்படுகிறது.

அதன் அரசியல் விளைவுகள், பிரதிபலிப்புகளை மட்டுமல்லாமல், செப்டம்பர் 7ஆம் திகதி ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக மேற்குலகம் கொண்டுவரும் கடுமையான பிரேரணையையும் அவரது அரசு எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

அடுத்த மாதம் முற்பகுதி ரணிலின் அரசுத் தலைமைக்கு கெடுபிடிகள் மிகுந்ததாகவே அமையப் போகின்றது.

# நோயாளிகளுக்கு உணவை வழங்குவதில் சிக்கல் நிலை!

### அகில இலங்கை தாதியர் சங்கம் தகவல்

மருந்து தட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக சில வைத்தியசாலைகளில் நோயாளர்கள் மற்றும் சுகாதார உதவி பணியாளர்களுக்கு ஒரு வேளை உணவை வழங்குவது பெரிய சிக்கலாக மாறியுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

உணவுப் பொருள்களை விநியோகிப்போருக்கு சரியான முறையில் பணத்தை வழங்கவில்லை என்பதால், வைத்தியசாலைகளுக்கு உணவு, பழங்கள், சூப், கஞ்சி போன்றவற்றை சமைப்பதற்குத் தேவையான மூலப்பொருள்கள், முட்டை, இறைச்சி, மீன் என்பன விநியோகிக்கப்படுவது குறைந்து வருவதாக சங்கத்தின் தலைவர் எஸ்.பி.மெதவத்த தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிகப் பெரிய வைத்தியசாலையான கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் இந்த சிக்கல் காணப்படுகிறது. நோய்களில் இருந்து குணமாக நோயாளிகளுக்கு மருந்தை போன்று போக்கான உணவையும் வழங்க வேண்டும்.

இந்த நிலைமை தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி, விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை பணத்தை செலுத்தி துரிதமாக நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மெதவத்த மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு அதிக கடன்களை வழங்கியதில் இந்தியா முதலிடம்!

இலங்கைக்கு இந்த ஆண்டு அதிக கடன் வழங்கியதில் இந்தியா முதலிடம் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவிற்கு அடுத்தபடியாக ஆசிய அபிவிருத்தி வங்கி காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு நகரை மையமாக கொண்டு இயங்கி வரும் 'வெரிட் ரிசர்ச்' என்ற ஆய்வு அமைப்பு முன்னெடுத்த ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கைக்கு உலக நாடுகளும், அமைப்புகளும் கடன் உதவி வழங்கி வருகின்றன.

இலங்கைக்கு இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடன் உதவி வழங்கி வருகின்றன. இதன்படி, இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கை 96 கோடியே 80 லட்சம் டொலர் வெளிநாட்டு கடன் பெற்றுள்ளதாகவும், இதில் இந்தியா 37 கோடியே 70 லட்சம் டொலர் வழங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு அடுத்ததாக ஆசிய அபிவிருத்தி வங்கி 36 கோடி டொலர் கடன் வழங்கி இருப்பதாக அந்த அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. கடந்த 2017 முதல் 2021 ஆம் ஆண்டுகளுக்கு இடையேயான காலகட்டத்தில் இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடாக சீனா இருந்துள்ளது.

எனினும், இலங்கையின் பொருளாதார நெருக்கடி உச்சக்கட்டத்தில் இருக்கும் இந்த ஆண்டில் கடன் வழங்கிய நாடுகளில் இந்தியா முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கைக்கு சுமார் 400 கோடி அமெரிக்க டொலர்களை இந்தியா நிதியுதவியாக வழங்கியுள்ளதாகவும் தொடர்ந்தும் புதிய நிதியுதவியை வழங்கும் திட்டம் இல்லை எனவும் இந்தியா அறிவித்துள்ளது. இந்தியா, இலங்கைக்கு 380 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாகவும், நாடு என்ற வகையில் இப்படியான உதவியை தொடர்ந்தும் வழங்க முடியாது என இந்திய அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### குடாநாட்டில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்திய 10 பேர் அண்மைக்காலங்க ளில் உயிரிழந்துள்ளனர். இதற்கு அடிமையான 320 பேர் வரையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ். போதனா மருத் துவமனையில் ஹெரோய்னுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலை யம் திறக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் 134 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

ஹெரோய்னுக்கு அடிமையானவர்களில் அதிகமானோர் 18 – 23 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதுடன், யாழ். நகரிலுள்ள பிரபல பாடசாலைகளின் மாணவர்களும் இதற்குப் பழக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கொரோனா, பொருளாதார நெருக்கடி எனப் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் யாழ். குடாநாட்டில் உயிர் கொல்லிப் போதைப் பொருளான ஹெரோய்ன் பயன்பாடு பல்கிப் பெருகியுள்ளது.

கொழும்பிலிருந்து தொடர்ச்சியாக உயிர்கொல்லி ஹெரோய்ன் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படுகின்றது. இங்குள்ள பல நூற்றுக்கணக்கான முகவர்கள் ஊடாக அவை குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் விநியோகிக் கப்படுகின்றன.

உயிர்கொல்லி ஹெரோய்னை ஊசி மூலமே அதிகளவானோர் பயன்படுத்து கின்றனர். ஒரு நாளைக்கு 30 மில்லி கிராம் தொடக்கம் 300 மில்லி கிராம் வரையில் நுகர்கின்றனர்.

18 – 23 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களே உயிர்கொல்லி போதைப்பொரு ளான ஹெரோய்னை அதிகளவில் நுகர்கின்றனர். இதனைத் தவிர பாடசாலை மாணவர்களும் நுகர்கின்றனர்.

ஹெரோய்ன் நுகரும் பெரும்பாலான இளைஞர்களின் பெற்றோர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து தாமே தமது பிள்ளைகளை பொலிஸில் ஒப்படைக்கின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. சில பெற்றோர் மருத்துவமனைகளிலும் தமது பிள்ளைகளை ஒப்படைத்துள்ளனர்.

எவ்வளவு காலம் சென்றாலும் பரவாயில்லை. இவனை நீங்கள் வைச்சிருங்கோ. வெளியில விட்டால் பெரிய பிரச்சினை – என்று தெரிவித்து தாய் ஒருவர் அண்மையில் தனது மகனை மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையான சுமார் 320 பேர் வரையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானமையால் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைதானவர்களும் இதற்குள் உள்ளடங்குகின்றனர்.

உயிர் கொல்லி போதையான ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையானவர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்வதால், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசேட சிகிச்சைப் பிரிவு இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு இதுவரை 134 பேர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சுமார் 20 கிராமங்கள் ஹெரோய்ன் போதைக்கு அடிமையானவர்களின் கூடாரமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தக் கிராமங்களிலுள்ள இளைஞர்களில் அநேகர் இதனைப் பயன்படுத்துகின்றமையும் பல்வேறு தரப்புக்கள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்லும் இந்தப் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான முறையான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் முன்வரவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

ஞாயிற்றுக்கிழமை 18.09.2022

# நேபாளத்தில் கடும் மழை, நிலச்சரிவு: 14 பேர் பலி; 10 பேரைக் காணோம்!






காத்மண்டு, செப்.18

நேபாளத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவால் குறைந்தது 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், மேலும் 10 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மலைப்பிரதேசமான நேபாளத்தில் மழைக்காலங்களில், குறிப்பாக ஜூன் - செப்டம்பர் மாதங்களில் கனமழையால் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு போன்றவை ஏற்படுவது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் தொடர் கனமழையால் அங்குநிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. நேபாள தலைநகர் காத்மண்டிலிருந்து மேற்கே 450கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிற அச்சாம் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் 5 வீடுகள் அடியோடு சரிந்து விழுந்துள்ளன. அதில் வீட்டுக்குள் இருந்தவர்கள் அடியில் புதைப் பட்டிருந்தனர். மீட்புப்பணியாளர்கள் புதைந்தவர்களை உயிருடன் மீட்பதற் கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த நிலையில், இந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 7 பேரை மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். மேலும் காணாமல் போன 10 பேரை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் நேபாளத்தில்கனமழைவெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவால் குறைந்தது 48 பேர் உயிரிழந்துள்ளமையுடன். 12 பேர் காணாமல் போயுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சீனாவில் 42மாடிக் கட்டடம் தீயில் முற்றாக எரிந்து நாசம்

### உயிரிழப்புகள் பற்றித் தகவலில்லை

சீனா, செப்.18

சீனாவில் உள்ள ஹுனான் மாகாணத்தின் சாங்கா நகரில் 42 மாடிக் கட்டடம் ஒன்றில் நேற்று முன்தினம் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

715 அடி உயரமுள்ள இந்த கட்டடம் 2000 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. இந்த கட்டடத்தில் அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு நிறுவனமான சீனா டெலிகொமின் அலுவலகம் இயங்கி வந்தது. இந்த நிலையில் 42 உயரமுள்ள கட்டடத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் மாலை 4:30 மணியளவில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது.

இதில் 42 மாடி முழுவதும் தீ பரவியுள்ளது. தீயை அணைக்க, 280 தீயணைப்பு வாகனங்களில் வந்த வீரர்கள் தீயை அணைக்கப் போராடி வந்த நிலையில். கட்டடம் மொத்தமும் தீக்கிரையாகியதால், அப்பகுதி முழுவதும் புகை மண்டலமானது. ஆனால், இந்த தீ விபத்தில் உயிரிழப்புகள் குறித்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

இந்த தீ விபத்தால் பாரிய பொருள்சேதமும் ஏற்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்சவும், தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் அறிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## ராணியின் இறுதிநிகழ்வுகளுக்குரஷ்யாவை அழைக்காதது ஒழுக்கக்கேடு எனக் காட்டம்

### கண்டனம் தெரிவித்து அந்நாடு அறிக்கை



ரஷ்யா, செப்.18

உக்ரைன் தாக்குதல் தொடங்கியதில் இருந்து இங்கி லாந்து - ரஷ்யா ஆகிய நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு முறிவடைந்திருந்தது. இந்நிலையில், ராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கிற்கு ரஷ்யாவை அழைக்காதஇங்கிலாந்தின் முடிவிற்கு ரஷ்யா கடும் கண்டனங்களை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்யா வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மரணத்தைத் தொடர்ந்து நடைபெறும் சடங்கு நிகழ்வுகளுக்கு ரஷ்ய தூதரகத்தின் தலைவர்கள் உட்பட ரஷ்ய அதிகாரிகளுக்கு அழைப்பிதழ்களை

அனுப்புவதில்லை என்று இங்கிலாந்து வெளியுறவு அலுவலகம் லண்டனில் உள்ள ரஷ்ய தூதரகத்திற்கு அறிவித்துள்ளது

உலகெங்கிலும்உள்ளமில்லியன்கணக்கான மக்களின் இதயங்களைத் தொட்ட ஒரு தேசிய சோகத்தை, புவிசார் அரசியல் நோக்கங்களுக் காகப் பயன்படுத்துவதற்கும், நமது நாட்டுடன் கணக்கை தீர்ப்பதற்கும் இந்த முயற்சியை நாங்கள் மிகப்பெரிய ஒழுக்கக்கேடானதாகக் கருதுகிறோம். இரண்டாம் உலகப் போரின் போது நாஜிக்கள் மற்றும் அவர்களின் உக்ரேனிய கூட்டாளிகளான ஸ்டீபன் பண்டேரா மற்றும் ரோமன் ஷுகேவிச் ஆகியோருடன் சண்டையிட்ட பிரிட்டிஷ் இராணுவத்தின் துணை பிராந்திய சேவையில் பணியாற்றிய இரண்டாம் எலிசபெத்தின் நினைவை இது அவமதிக்கிறது.

இன்று பிரிட்டிஷ் தரப்பு வேறு பக்கச் சார்பை எடுத்துள்ளனர். அதே நேரத்தில் மொஸ்கோ வெற்றிக்கு பங்களித்த அனைத்து வீரர்களையும் நினைவுகூருகிறது. மற்றும் தொடர்ந்து நினைவுகூரும்.

இரண்டாம் எலிசபெத், மிகவும் வலுவான ஒருங்கிணைக்கும் சக்தியாக இருந்தவர் மற்றும் கொள்கை அடிப்படையில்அரசியலில் தலையிடாமல் இருந்தவர். எங்கள் பங்கிற்கு, ஐக்கிய இராச்சியத்தில் உள்ள மக்களுக்கு அவர்களின் பெரும் இழப்பிற்காக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வண்ணப் புரட்சிகளைத் தூண்டுவதைத் தடுக்க ரஷ்யா, பிற நாடுகளுக்கு சீன அதிபர் அழைப்பு

முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகளை உலுக்கிய மக்கள் எழுச்சிகளை - குறிப்பாக, வெளிநாட்டுச் சக்திகள் வண்ணப் (நிறம் ரீதியான)புரட்சிகளை தூண்டுவதைத் தடுப்பதில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்குமாறு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதி நாளான நேற்று முன்தினம் ரஷ்யாவிற்கும் பிற உறுப்பு நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

உஸ்பெகிஸ்தானில் சீனா மற்றும் ரஷ்யா தலைமையிலானபாதுகாப்புக்குழுவாஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்.சி.ஓ.) உச்சி மாநாட்டில் பேசிய சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், உறுப்பு நாடுகள் தங்கள் சொந்தப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நலன்களைப் பாதுகாக்க ஒருவருக்கொருவர் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 2,000 சட்ட அமுலாக்கப் பணியாளர்களுக்கு சீனா பயிற்சி அளிக்கும் என்றும், பயங்கரவாத எதிர்ப்புப் பணிகளில் கவனம் செலுத்தும் பயிற்சித் தளத்தை அமைக்கும் என்றும் அவர் கூறியுள்ளமையுடன், சீனாவின் குளோபல் செக்யூரிட்டி முன் முயற்சியில் கையெழுத்திட உறுப்பு நாடுகளுக்கு அவர் அழைப்பும் விடுத்துள்ளார்.

எந்த நாடும் மற்றவர்களின் இழப்பில் தனது சொந்தப் பாதுகாப்பை பலப்படுத்தக்கூடாது என்ற கருத்தை உள்ளடக்கிய கருத்தாக்கத்தினை அவர் கடந்த ஏப்ரல் மாதம் முன்மொழிந்திருந்தார்.


மேலும், வளர்ச்சியடைந்துவரும்நாடுகளுக்கு சீனா 1.5 பில்லியன் யுவான் (214 மில்லியன் அமெரிக்க டொலர்) மதிப்பிலான தானியங்கள் மற்றும் பிற அவசர உதவிகளை வழங்கும் எனவும், சீனப் பொருளாதாரம் மீள்தன்மையுடனும் திறன் மிக்கதாகவும் இருப்பதாகவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியக் காட்டில் சிவிங்கிப் புலிகள் தாக்குப் பிடித்துத் தப்பிப் பிழைக்குமா?



புதுடெல்லி,செப்.18

நமீபியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட சிவிங்கிப் புலிகள் திட்டம் வெற்றிகரமாக அமையுமா என்று வன விலங்கு பாதுகாவலர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இந்தியாவில் அழிந்து போன சிவிங்கிப் புலிகள் இனத்துக்குப் புத்துயிரூட்டும் விதத்தில், நமீபியாவில் இருந்து 8 சிவிங்கிப் புலிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றை பிரதமர் மோடி மத்திய பிரதேச மாநிலத்தில் காட்டுக்குள் விட்டார்.

ஆனால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக அமையுமா என்று விலங்குப் பாதுகாவலர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். புதிய சுற்றுப்புறச் சூழலில் சிவிங்கிப் புலிகள் வேட்டையாடி உட்கொள்ள உணவு, பிற வனவிலங்குகளுக்கு இரையாகாமால் தங்களை அவை காத்துக் கொள்ளும் திறன் மற்றும் இனப்பெருக்க முறை ஆகியவற்றில் பெரும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் நிறைந்திருக்கின்றன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இந்தியாவின் முன்னணி விலங்கு பாதுகாவலர் வால்மிக் தாபர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:-

வனவிலங்குகளான ஹைனாக்கள்(கழுதைப் புலி), சிறுத்தைகள், காட்டு நாய்கள் போன்றவைகளால் புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள ஆப்பிரிக்க சீட்ட இனமான சிவிங்கிப் புலிகளுக்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

புதிய சுற்றுப்புறச்சூழலில் சிவிங்கிப் புலிகள் என்ன சாப்பிடும் என்பது தெரியவில்லை. மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவில், இடப்பற்றாக்குறை மற்றும் இரையை தேடுவதில் சிரமம் ஆகியவற்றை சிவிங்கிப் புலிகள் எதிர்கொள்ளலாம். இந்த பகுதி பெரும்பாலும் சிவிங்கிப் புலிகள் முக்கிய எதிரிகளான கழுதைப் புலிகள் மற்றும் இந்திய சிறுத்தைகளால் நிறைந்துள்ளது. ஆப்பிரிக்காவில், கழுதைப. புலிகள் சிவிங்கிப்புலிகளைத் துரத்திக் கொல்லும் திறன் பெற்றவை. மேலும், இந்த பகுதியை சுற்றிலும் 150 கிராமங்கள் உள்ளன. அங்குள்ள நாய்கள் சிவிங்கிப் புலிகளைக் கொல்லும் வாய்ப்புள்ளது. ஏனெனில், சிவிங்கிப் புலிகள் அமைதியான விலங்குகள். அவை பெரும்பா லும் இந்த வனவிலங்குகளை எதிர்த்து சண்டையிடாதவை. இதனால் அவை பிற விலங்குகளுக்கு இரையாகிவிடுகின்றன. உலகின் வேகமாக பாய்ந்து செல்லும் திறன்வாய்ந்த, வேகமாக ஓடக்கூடிய விலங்கினமாக சிறுத்தைகள் மற்றும் சிவிங்கிப் புலிகள் இருந்தாலும், புதிய சுற்றுப்புறச்சூழலில் அது சாத்தியமில்லை.

செரெங்கேட்டி (தான்சானியாவின் தேசிய பூங்கா) போன்ற இடங்களில், பெரிய புல் வெளிகள் இருப்பதால் சிவிங்கிப் புலிகள் ஓடிவிடும்.

ஆனால், குனோ தேசிய பூங்காவில், பெரும்பாலான வனப்பகுதியை புல்வெளியாக மாற்றாவிட்டால், வேகமாக ஓட சிவிங்கிப் புலிகள் முடியாது. மேலும் அவ்வப்போது அங்கு வரும் புலிகள் கூட இந்த சிவிங்கிப் புலிகளுக்கு எமனாக அமையலாம். இங்கு சிவிங்கிப் புலிகள் புள்ளிமான்களைத் தான் பெரும்பாலும் வேட்டையாட வேண்டும். ஆனால் அவை வனப்பகுதிக்குள் மறைந்து கொள்ள முடியும் சூழல் அதிகம். மேலும், இந்த மான்களுக்கு பெரிய கொம்புகள் இருப்பதால் சிவிங்கிப் புலிகளைக் காயப்படுத்தலாம். மேலும் இந்த இன சிறுத்தைகளால் காயம் தாங்க முடியாது; பெரும்பாலும் அது ஆபத்தானது. சிவிங்கிப் புலிகள் நீண்ட காலமா அரச பரம்பரையினரின் செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்டு வந்த விலங்கு. அவை இதுவரை எந்தவொரு மனிதனையும் கொன்றதில்லை. சிவிங்கிப் புலிகள் அமைதியான விலங்குகள். சிவிங்கிப் புலிகள் இன பெருக்கத்தில் சிறப்பாக செயல்படாது. உலகில் சுமார் 6.500 முதல் 7,100 சிவிங்கிப் புலிகள் மட்டுமே உள்ளன. மேலும் அவற்றின் இறப்பு விகிதம் (குட்டி நிலையில் இறப்பு) 95 சதவீதம். இது அதிகமான விகிதமாகும் சிவிங்கிப் புலிகள் மீண்டும் இந்தியாவில் வளர்க்கப்படுவது ஒரு பெரிய பணி. இந்த விலங்குகளின் வாழ்க்கையை உறுதிப்படுத்த அவை 24 மணிநேரமும் கண்காணிக்கப்பட வேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பொலிஸ் நிலையத்தையே தாக்கிச் சூறயாடிய மக்கள்

## பீகார் பிரான்பூரில் சம்பவம்

ராஞ்சி,செப்.18


பீகாரில் கிராம மக்கள் ஒன்று சேர்ந்து பிரான்பூர் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு பொலிஸாரை அடித்துத் தாக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, 40 வயதான பிரமோத் குமார் சிங் என்பவர் மது பாட்டில்களை வைத்திருந்தமைக்காகக் கைது செய்யப்பட்டார். பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட பிரமோத்குமார்சிங் காவல்நிலையத்தில் இறந்து கிடந்தார்.

பொலிஸ் காவலில் இருந்த நபர் உயிரிழந்தமையை அடுத்து, இந்தச் செய்தி காட்டுத்தீயாக அப்பகுதியில் பரவியது.

உடனே உள்ளூர்வாசிகள் பொலிஸ் நிலைய வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை சேதப்படுத்தினர். அங்கிருந்த 9 பொலிஸாரையும் வெறித்தனமாக அடித்துள்ளனர். கிராம மக்கள் தடி மற்றும் இரும்புக் கம்பிகளுடன் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தியதில் அதிகாரிகள் காயமடைந்தனர். உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இருந்து கூடுதல் பொலிஸார் பாதுகாப்புப் பணிக்கு வரவழைக்கப்பட்ட பின்னரே நிலைமை கட்டுக்குள் வந்தது. காயமடைந்த பொலிஸார் அனைவரும் கதிஹாரில் உள்ள மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் உடல்நிலை சீராக இருப்பதாகக் கூறப்படுகிறது. நிலைமை முழுவதுமாக கட்டுக்குள் உள்ளது. எங்கள் குழுக்கள் அப்பகுதியில் முகாமிட்டுள்ளன. சிங்கின் உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பொலிஸாரைத் தாக்கியவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது என்று செயல் பொலிஸ் கண்காணிப்பாளர் தயா சங்கர் நேற்று சனிக்கிழமை தெரிவித்தார். கடந்த 2016 முதல், பீகார் மாநில அரசு மதுபானம் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவற்றைத் தடை செய்து அதைத் தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கியது குறிப்பிடத்தக்கது.

# 70 ஆண்டுகளின் பின் இந்தியாவில் உலா வருகின்றன சிவிங்கிப் புலிகள்



இந்தியாவில் 1952 ஆம் ஆண்டுக்குப் பிறகு முற்றிலும் அழிந்துவிட்ட இனமாக அறிவிக்கப்பட்ட சிவிங்கிப் புலிகள் (சீட்டாக்கள்) மீண்டும் 70 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய மண்ணில் வலம் வரத்தொடங்கியுள்ளன.

நமீபியாவில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட 3 பெண் சிவிங்கிப் புலிகள் மற்றும் 5 ஆண் சிவிங்கிப் புலிகள் என மொத்தம் 8 சிவிங்கிப் புலிகள் நேற்று குனோ தேசிய வனவிலங்கு பூங்காவில் திறந்துவிடப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி பேசியதாவது:-

சிவிங்கிப் புலிகளை மீண்டும் இந்தியாவில் அறிமுகம் செய்யும் திட்டத்திற்கு உதவிய நமீபியா அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உலகில் வேகமாக ஓடக்கூடிய இந்த சிவிங்கிப் புலிகளைப் பார்ப்பதற்கு மக்கள் இன்னும் கொஞ்ச காலம் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். இந்த சிவிங்கிப் புலிகள் குனோ தேசிய பூங்காவிற்கு இன்று நமது விருந்தாளிகளாக வந்துள்ளன. விரைவில் அவை இதனைத் தங்களது வீடாக மாற்றிக்கொள்ள நாம் அவகாசம் கொடுக்க வேண்டும் என்றார்.



# சேலம் அருகே பஸ் – லொறி மோதல்: 6 பேர் உடல் நசுங்கிப் பரிதாபச் சாவு

சென்னை - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் ஓம்னி பஸ் மீது டிப்பர் லொறி மோதியதில் 5 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் காயமடைந்த மேலும் 3 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சேலம் மாவட்டம் பெத்த நாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் சென்னையில் நடைபெறும் உறவினர் இல்ல மஞ்சள் நீராட்டு விழாவுக்கு செல்ல ஓர் ஒம்னி பஸ்ஸில் டிக்கெட் எடுத்து இருந்தனர். அந்த பஸ் சேலத்தில் இருந்து நேற்று இரவு 11.30 மணிக்கு சென்னைக்கு புறப்பட்டது. அந்த பஸ்ஸில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். நள்ளிரவு 12.45 மணி அளவில் அந்த பஸ் பெத்தநாயக்கன்பாளையம் வந்தது. அப்போது சேலத்தில் இருந்து ஆத்தூர் நோக்கி சென்ற டிப்பர் லொறி பஸ்ஸின் மீது வேகமாக மோதியது. இந்த கோர விபத்தில் மேற்படி குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார். விபத்து குறித்து தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடம் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

நள்ளிரவில் நடந்த இந்த விபத்தால் சேலம் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அமரர் அந்தனி ஜான் அழகரசன் அடிகளாரின் மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நேற்று







(க.கிருபாகரன்)

அமரர் அருட் கலாநிதி அந்தனி ஜான் அழகரசன் அடிகளார் தனது இவ்வுலக வாழ்வின் நிறைவு நாள்களில் எழுதிய மூன்று நூல்களின் வெளியீடும் மற்றும் போதகர் இராசப்பாவினால் எழுதி மெட்டமைக்கப்பட்ட 'தேவனை தேடும் ராகங்கள்' என்னும் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வும் நேற்று மட்டக்களப்பில் இடம் பெற்றன.

மட்டக்களப்பில் உள்ள தனியார் விடுதியொன்றின் மண்டபத்தில் யாழ்ப்பாணம் சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல்கல்லூரிமுன்னைநாள்அதிபர் அருட்பணி ம.யூட் சுதர்சனின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

அமரர் அந்தனி ஜான் அழகரசன் அடிகளார் தனது இவ்வுலக வாழ்வின் நிறைவு நாள்களில் எழுதிய 'நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு' எனும் நூலும், அன்னாரினால் 1972 ஆண்டு நம் நாட்டின் நிலை கருதி அன்று எழுதப்பட்டு வெளியிடப்பட்ட 'புரட்சிக் கிறிஸ்து' எனும் நூல் இன்றைய தேவை கருதி இரண்டாம் முறையாகவும், அத்தோடு ஒரு கத்தோலிக்கக் குருவாக தனது வாழ்க்கை பயணத்தையும் குருத்துவப் பயணத்தையும் பதிவிடும் முகமாக அன்னாரினால் எழுதப்பட்ட 'அவரின் திராட்சைத் தோட்டத்தில்' எனும் புத்தகமும் வெளியிடப்பட்டன.

அன்னாரின் இளைய சகோதரரான கவிஞர் முகில் வாணன் எனும் புனை பெயரையுடைய போதகர் இராசப்பா அவர்களினால் எழுதி மெட்டமைக்கப்பட்டு, பதிவிடப்பட்டள'தேவனைப் தேடும் ராகங்கள்' எனும் இறுவெட்டும், இவர்களின் மருமகனான மட்டக்களப்பு புனித அந்திரேயாஆலய முகாமைக்குரு அருட்பணி ஞானராசாமனோரூபனால்வெளியிட்டுவைக்கப்பட்டது.

இதற்குஅனுசரணையையும்,ஆலோசனையையும் போதகர் இராசப்பா வழங்கியிருந்தார்.

இந் நிகழ்வில் ஆரம்ப மன்றாடலை போதகர் இராசப்பாவும், வாழ்த்துரையை இலங்கை இறையியல் கல்லூரி அதிபர் அருட்பணி என். .அருள்நாதனும், ஆசியுரையை இலங்கைத் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் அதி.வண.டிலோறாச் றஞ்சித் கனகசபையும் ,வரவேற்பு நடனத்தை கொம்மாதுறை விஞ்ஞான போதனா நிலைய மாணவிகளும் வழங்கியிருந்தனர். வரவேற்புரையை போதகர் கணபதிப்பிள்ளை சகாயதேவன் நிகழ்த்தினார்.

முதற்பிரதிகளை கிழக்குப் பல்கலைக்கக வர்த்தகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திரன் சற்குணம் தயாராஜ் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளை இலங்கைத் திருச்சபை கிழக்குப் பிராந்திய பணி முதல்வர் அருட்பணி ரி.ஏ.தகருக்குமார், மட்டக்களப்பு கச்சேரி கிறிஸ்தவ சமய விவகாரங்களுக்கான உத்தியோகத்தர் திருமதி ரேக்கா நிருபன், அருட்பணி ம.யூட் சுதர்சன், பிலிமத்தலாவை இலங்கை இறையியல் கல்லூரி புதிய ஏற்பாட்டு விரிவுரையாள அருட்பணி சா.சுரேஷ்குமார், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பொதுசனநிர்வாகத்துறைதுறைத்தலைவ பேராசிரியர்மார்க்கண்டேயன்ரூபவதனன்ஆகியோருப் பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்வில் நூல்களுக்கான ஆய்வுரைை அருட்பணி.சா.சுரேஷ்குமாரும். நூல்களுக்கான கருத்துரையை மா. ரூபவதனனும், ஏற்புரைை போதகர்.இராசப்பாவும், நன்றியுரையை திருமதி கொறினா ஜேசுதாஸும் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்ச்வை இலங்கைத் திருச்சபையின் கிழக்கு பிராந்திய வாலிப சங்கப் பொறுப்பமைக் குரு அருட் பணி நேசராசா சபிலாஷ் தொகுத்து வழங்கினார்.

'நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு' என்னும் நூல் கல்விப் பொதுத் தராத சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கு உதவக்கூடியத எனவும், 'புரட்சிக் கிறிஸ்து' எனும் நூல் கிறிஸ்தவ டிப் ளோமா கற்கையை மேற்கொள்ளும் மாணவர்களுக் உகந்தது எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

# 'வன்முறைக்கெதிரான வெற்றி' செயற்திட்ட அங்குரார்ப்பணம்





(கல்லடி நிருபர்)

''வன்முறைக்கெதிரான வெற்றி' செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு மட்டக்களப்பு கல்லடியில் இடம்பெற்றுள்ளது.

தேவைநாடும்மகளிர்அமைப்பு, யூ.எஸ்.எயிட் இன் நிதியுதவியின் மூலம் 'வன்முறைக்கு எதிரான வெற்றி' செயற்திட்டத்தின் ஊடாக பாலியல், பால்நிலைக்கெதிரான வன்முறைகளை இனங்கண்டு அவற்றிலிருந்து வெற்றிக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ள நிலையில் இந்த செயற்றிட்டத்தின் ஊடாக, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கவும், மாவட்ட, பிராந்திய மற்றும் தேசிய ரீதியில் செயற்படுவதற்கான நான்காண்டு காலப் பயணத்தின் அங்குரார்ப்பணமே இடம் பெற்றுள்ளது.

இச் செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த் மற்றும் திருமதி.நவரூப ரஞ்ஜினி முகுந்தன் ஆகிய இருவரும் கலந்துகொண்டனர். க மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி கெனடி, மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் ந.பிரபாகரன், விசேட உளநல வைத்திய நிபுணர் த.கடம்பநாதன், மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவின் பொறுப்பதிகாரி சந்துனி எதிரிசிங்க, பிராந்திய சுகாதார பணிமனையின் வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய துறைசார் அதிகாரிகளும், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

தேவை நாடும் மகளிர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பாகவும், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கங்கள் தொடர்பாகவும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

தேவை நாடும் மகளீர் அமைப்பினால் இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான அனைத்துவிதமான வன்முறைகளையும் இல்லாதொழிக்கும் நோக்கில் கடந்த 3 தசாப்தங்களாக செயற்பட்டு வருகின்றமையுடன் உளவியல், மனநல ஆலோசனை, சட்ட உதவி, அவசரகால தங்குமிட வசதிகள் மற்றும் 24 மணி நேர துரித தொலைத்தொடர்பு சேவை களையும் வழங்கிப் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# 'உயிரோடு நானாக' நூல் அறிமுக விழா ஏறாவூரில்!

(க.கிருபாகரன்)

கதிர். திருச்செல்வம் எழுதிய 'உயிரோடு நானாக' நூல் அறிமுக விழா ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.

ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் திருமதி சுதாகரி மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணைய ளாளரும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான எந்திர நடராசா சிவலிங்கமும், சிறப்பு உரையாளராக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பஷீர்ச்சேகுதாவூத்தும் கலந்து கொண்டனர்.

இந்நூலுக்கான அறிமுக உரையை மகுடம் பதிப்பக நிறுவன வி.மைக்கல் கொலினும், நூல் மதிப்பீட்டு உரையை கலை, இலக் கியச் செயற்பாட்டாளரும், நூல் விமர்சகருமான திருஞானசம்பந்தன் லலிதகோபனும் நிகழ்த்தினர்.

நூலின் முதல் பிரதியை திருகோணமலை நீர் வடிகாலமைப்பு சபை பிரதம பொறியியலாளர் எந்திரி அமலதாஸ் வசந்தராஜ் பெற் றுக் கொண்டார்.

# இன்னும் தாகத்துடனே திலீபன் இருக்கின்றார்!

## மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் கருத்து





'திலீபன் இன்னும் தாகத்துடன் தான் இருக்கின்றார். பாரத தேசம் அவருடைய உயிர் பறிபோவதற்கு காரணமாக இருந்தது. இன்னும் பாரத தேசம் இலங்கைத் தீவிலிருக்கின்ற தமிழர்களின்கோரிக்கையைமதிக்காமலுள்ளது.'என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார். திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தியின் 2 ஆம் நாள் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடியில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

இதன்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

இந்திய இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக திலீபன் உண்ணா விரதப் போராட்டம் நல்லூரிலே 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி 5 அம்சக் கோரிக்கைகளுடன் ஆரம்பமானது. உண்ணா நோம்பிருந்து, 12 நாள்கள் ஒரு துளி நீர்கூட அருந்தாது தனது உடலை கொஞ்சம் கொஞ்சமாக உருக்கி தன்னுடைய உயிரை அர்ப்பணித்தார் திலீபன்.

அந்தக் காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு தமிழர்கள் வடக்கு கிழக்கு முழுவதும், துன்புற்றிருந்த வேளையிலும், இனத்துக்காக அவர் உயிர் நீத்துள்ளார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தமிழர்களுடைய அபிலாஷை என்பது 13 ஆவது திருத்தத்துக்குள்ளே முடக்கப்பட்டு, ஒற்றையாட்சிக்குள் முடக்கப்பட்டுள்ள வேளையிலே,அதற்கு எதிராகத் தமிழ் மக்களுடைய தேசம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். தமிழர்கள் நிம்மதியாக வாழ வேண்டும். கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படல் வேண்டும். சிங்கள பௌத்த மயமாக்கல் அகற்றப்படல் வேண்டும். மேலும்,தமிழர் தயாகத்திலிருந்து பொலிஸார் வெளியேற வேண்டும்போன்றஅடிப்படைக்கோரிக்கைகளை முன்வைத்து அவருடைய உண்ணா விரதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால், இன்னும் அவருடைய கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கவில்லை. திலீபன் இன்னும் தாகத்துடன்தான் இருக்கின்றார். பாரத தேசம் அவருடைய உயிர் பறிபோவதற்கு காரணமாக இருந்தது. இன்னும் பாரத தேசம் இலங்கைத் தீவிலிருக்கின்ற தமிழர்களின் கோரிக்கையை மதிக்காமலுள்ளது.

சிலர் 13 ஆவது திருத்தத்தை ஆதிக்கின்றனர். நாம் அதனை எதிர்க்கும் போது, அரசியலுக்காக எதிர்க்கின்றோம் என எம்மீது சிலர் சேறு பூசை முனைகின்றார்கள். எனவே, திலீபனது கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியாமல் இருக்கின்றது.

மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும். தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்படல் வேண்டும். அதற்காக திலீபனுடைய பாதையில் நாங்கள் தொடர்ந்து பயணிப்போம். – எனத் தெரிவித்துள்ளார்.

இதன்போது திலீபனின் உருவப் படத்திற்கு மக்கள் மலரஞ்சலி செலுத்தி, ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கிரான் விவேகானந்தா பாடசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு ஆரம்பத்துவைப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு கல்குடா வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கிரான் விவேகானந்தா பாடசாலையில் பற்சிகிச்சைப்பிரிவு ஆரம்பம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் அனைவரினதும் பற்களையும் வாய்ச்சுகாதாரத்தையும் பரிசோதனை செய்து தேவையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இச் செயற்திட்டத்தை கல்குடா வலயத்தில் துரிதப்படுத்தும் முகமாக கிரான் விவேகானந்தா வித்தியாலயத்தில் நவீன Dental Chair உடனான பற்சிகிச்சைப்பிரிவானது மட்டக்களப்பு பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் வைத்தியர் முரளிதரனின் முயற்சியுடன், Biomed Engineer நிறுவனம், வலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, பாடசாலை அதிபர், பாசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட் டோரின் பூரண ஒத்துழைப்புடன் இந்த பற்சிகிச்சைப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையை அண்மித்துள்ள ஏனைய பாடசாலை மாணவர்களும் இதன்மூலம் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிகழ்விற்கு மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் பிரதம அதிதியாக கலந்துகொண்டுபற்சிகிச்சைப்பிரிவை ஆரம்பித்து வைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் அனைவரினதும் பற்களையும் வாய்ச்சுகாதாரத்தையும் பரிசோதனை செய்து தேவையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் திட்டத்தின் மூலம் ஏற்கனவே 2000 மாணவர்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் இங்கு உரையாற்றும் போது தெரிவித்தார்.

# தேசிய மரநடுகை வாரத்திற்குரிய மட்டு. பிரதான நிகழ்வு வாகரையில்







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சமுர்த்தி திணைக்களத்தினால் 'சமுர்த்தி பசுமை நிறதாயக அறுவடை' எனும் தொனிப்பொருளில் தேசிய மரநடுகை தின சுற்றாடல் வேலைத்திட்ட மர நடுகை வாரம் நேற்று 17 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம்திகதி வரை பிரகடனப்படுத்தி மரம் நடுகை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான மரநடுகை நிகழ்வு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் காயங்கேணி கிராமத்தில் நேற்று இடம் பெற்றது.

வாகரை பிரதேச செயலாளர் ஜி.அருணன் தலைமையில் காயங்கேணி மீனவர் சங்க கட்டட வளாகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதயாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், சமுர்த்தி மாவட்ட தலைமையக முகாமையாளர் ஜே.எஸ். மனோகிதராஜ், காயங்கேணி சரஸ்வதி வித்தியாலய அதிபர் எஸ்.மோகனசுந்தரம், வாகரை பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி கே. கலைவாணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்னர்.

இதன்போது பலா, தேக்கு, கூலா போன்ற மரக்கன்றுகளும் பனை விதைகளும் அதிதிகளால் நடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2022இல் வெளியிடப்பெற்றது.